செய்தி வெளியீடு எண்.199 நாள்.13.3.2008

**<u>நெடுஞ்சாலைத் துறை</u>**
**<u>13.03.2008</u>**

## <u>பத்திரிக்கைச் செய்தி</u>

சென்னை மாநகரில் போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காக "பறக்கும் சாலைத்" திட்டத்தினை (Elevated Highway) செயல்படுத்துவது என்ற அரசின் கொள்கையின்பேரில் சென்னை துறைமுகத்திற்கு சரக்கேற்றி வரும் கனரக வாகனங்களுக்கு தனியே பறக்கும் சாலை திட்டத்தினை மைய அரசுடன் இணைந்து செயல்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள மதுரவாயிலில் இருந்து சென்னைத் துறைமுகத்திற்கு நேரடியாக "பறக்கும் சாலை" (Elevated Highway) அமைக்கும் திட்டத்தினை மொத்தம் ரூ.1468 கோடி மதிப்பில் தமிழ்நாடு அரசு, மைய அரசு மற்றும் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம் இணைந்து செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இத்திட்டத்தின்கீழ் மதுரவாயிலில் இருந்து கோயம்பேடு வரை தற்போதுள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலையின் மையப் பகுதியில் பெரிய தூண்கள் அமைத்து அதன்மீது பறக்கும் சாலை அமைக்கப்படும். அதனைத் தொடர்ந்து, கோயம்பேடு பகுதியிலிருந்து சென்னை துறைமுகம் வரை கூவம் ஆற்றின் இடது கரையோரமாகவும் பறக்கும் விரைவு சாலை உருவாக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின்பேரில் இதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்திற்கு தேவையான அரசு நிலத்தை இலவசமாக வழங்கவும், கூவம் ஆற்றின் கரையை இத்திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ளவும் தமிழ்நாடு அரசு இசைவு அளித்ததுடன் இத்திட்டத்திற்கு தேவைப்படும் தனியார் நிலங்களை கையகப்படுத்தவும், இத்திட்டத்தினால் பாதிப்படையும் குடும்பங்களுக்கு மறு குடியமர்வு செய்யவும் ஏற்படும் உத்தேச செலவான ரூ.345 கோடியை தமிழ்நாடு அரசும், சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகமும் சரிசமமாக ஏற்றுக் கொள்ளவும் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டமானது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.